பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 5 (22—10—71) வெள்ளி | வேலூர்: ஐப்பசி 6 (23—10—71) சனி [இதழ்: 107

பரிசுச் சீட்டு முறை மாறும்

சென்னை, அக். 22—

"ஒரு குறிப்பிட்ட ஆக்கப் பணியுடன் இணைக்கும் வகையில், தமிழக அரசுப் பரிசுச் சீட்டு முறையை மாற்றியமைக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது"

என்று சட்டமன்ற மேலவையில், கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்தார்.

'மாநில உரிமையைப் பறிப்பதல்ல'

'மக்கள் நலன் மேலோங்குவதற்கு வகை செய்யும் நடவடிக்கையே'

அரசியல் சட்ட 24-வது திருத்தம் பற்றித் தமிழக மேலவையில் முதலமைச்சர்

'வறுமையில் வாடும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வழி கோலும்' என விளக்கம்

சென்னை, அக். 22—

நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றியுள்ள அரசியல் சட்ட 24-வது திருத்த மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கும் வகையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நேற்று அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களால் முன்மொழியப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மசோதாவை, பிற்பகல் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களால் மேலவையில் முன்மொழியப்பட்டது.

மசோதாவை முன்மொழிந்து முதலமைச்சர் ஆற்றிய விளக்க உரையில், 'வறுமையில் வாடிடும் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு கங்கணம் கட்டிக்கொண்டுள்ளோம்' என்றார்; 'பொது நலன் மேலோங்கவே இந்தச் சட்டத் திருத்தம்' என்றும், 'இதனால் மாநிலங்களின் உரிமை பறிக்கப்படவில்லை' என்றும் எடுத்துக் காட்டினார்; அவர் ஆற்றிய உரையின் முக்கிய பகுதி வருமாறு :—

"வளர்ச்சியும், முன்னேற்றமும் காண்பதற்காக சமுதாய — பொருளாதார மாற்றங்கள் பலவற்றை நாம் இப்போது மேற்கொண்டுவருகிறோம்.

இவ்வாறு முன்னேற்றத்தையும் — வளர்ச்சியையும் காண்பதற்கு இவ்வகையில் நாம் மேற்கொள்ள வேண்டிய சட்ட நடவடிக்கைகளையும் — பொருளாதார நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு நமது அரசியலமைப்புச் சட்டம் நெகிழ்ந்து கொடுக்கக்கூடியதாகவும், இத்தகைய முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு உதவி செய்யக்கூடியதாகவும், தன்னலத்திற்கு எதிராகப் பொதுநலத்தின் மேன்மையை உறுதிப்படுத்தக்கூடியதாகவும் இருக்க வேண்டுமென்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

இவ்வாறு மாற்றத்திற்கு வழிவிடாத அரசியல் அமைப்புச் சட்டம், மக்களின் தேவைகளுக்கும் — ஆசைகளுக்கும் ஈடு கொடுக்காது.

நமது அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே 'அரசுக் கொள்கையின் நெறிமுறைக் கோட்பாடுகள்' என்ற பகுதி ஒன்று இருக்கிறது; அதில், நாம் அடைய வேண்டுமென்று விரும்புகின்ற சமுதாய — பொருளாதார நோக்கங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இந்த நோக்கங்களை நாம் எய்தியாக வேண்டும்; இவ்வாறு நாம் எய்த வேண்டுமானால், 'அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதித் துறை எதையும் திருத்துவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு' என வெளிப்படையாக வகை செய்ய வேண்டும்; இந்த அதிகாரம், அடிப்படை உரிமைகள் எதனாலும் சுருக்கப்படக் கூடாது.

"அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்யக் கருதியுள்ள திருத்தம், சட்டப் பிரச்சினையோ — அரசியல் அமைப்புப் பிரச்சினையோ அல்ல; அது, மக்களின் ஆர்வத்தை அப்படியே சித்தரிப்பதாக உள்ளது" என்று நமது தலைமை அமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

நம் நாட்டில் சனநாயகம்தான் இருக்க வேண்டுமென நாம் அனைவரும் உறுதி கொண்டுள்ளோம்; ஆனால், முன்னேற்றமும் மாற்றமும் ஏற்படுத்துவதை தடுத்து நிற்கும் தன்னலச் சக்திகளை மக்கள் மீறி அடக்க உறுதி கொண்டுள்ளனர்.

எனவே, புரட்சிகரமான மாற்றம் இருப்பது அவசியமாகும். வளைந்து கொடுக்கும் தன்மையில்லாத எதுவும் உயிரற்றுப் போகிறது; ஆர்வமும் எழுச்சியும் உள்ள மக்களின் தேவைகளை அது குறைவாகப் பிரதிபலிக்கிறது.

நமது நாட்டில் வறுமையிலே வாடி நிற்கும் பல இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதென நாம் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறோம். நாட்டிலே வறுமையை விரட்டுவதற்காகவே இத்திருத்தம் கொண்டுவரப்படுகிறது.

நமது சனநாயகத்தில் — முன்னேற்றத்தில் இவையெல்லாம் மைல் கற்களாகும்; நம் நாட்டிலுள்ள பல இலட்சக்கணக்கான மக்களின் நல்வாழ்வுக்கும், முன்னேற்றத்திற்கும் இவை நெருங்கிய தொடர்புடையவையாகும்.

மனிதாபிமானமுள்ள நமது உணர்வு, மிக நல்ல சமுதாயப் பயனை உருவாக்குவதற்கான போராட்டத்தில் இது ஒரு புது நிலை என்றே மக்கள் கருதிவருகின்றனர்; அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாம், அவர்களுடைய தேவைகளை உணர்ந்தறிந்து — அவர்கள் மாற்றம் வேண்டுவதை மதித்து — அதற்கு ஏற்ப பணியாற்ற வேண்டியது நமது கடமையாகும்.

சனநாயக அமைப்புகளிலே நமது மக்களுக்கு நம்பிக்கை வலுப்பட்டுள்ளது; நாடாளுமன்றம் அவர்களுடைய கருத்தை எடுத்துக்காட்டுவதாக இருப்பதால், அதற்கே முழு முதல் அதிகாரம் இருக்க வேண்டுமென மக்கள் நினைக்கின்றனர்; எனவே நாம், இத்திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழகத்தில் நக்சலைட்டுகள் நடமாட்டம்

கண்காணிக்கப் போலீசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை

மேலவையில் முதலமைச்சர் கருணாநிதி விளக்கம்

சென்னை, அக். 22—

"1969 ஆகஸ்டு மாதம் 2-ந்தேதிய 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில், கன்னியாகுமரியில் நக்சலைட்டுகளின் போராட்டத் தளம் ஒன்று செயல்படுவது பற்றியும், நக்சலைட்டுகளின் நடமாட்டங்களைப் பற்றியும் வெளிவந்த செய்தி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது; அரசாங்கம் அதனைத் தொடர்ந்து தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது; இனியும் எச்சரிக்கையாகக் கண்காணித்து அவ்வப்போது தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்"

என்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், நேற்று சட்டமன்ற மேலவையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது :—

"திருச்சி அருகில் குண்டுவைத்த சம்பவம் பற்றி இன்னும் புலன் விசாரணை முடிவடையாததால், அந்தக் குண்டு நக்சலைட்டுகளால் வைக்கப்பட்டதா என்று என்னால் இப்பொழுது சொல்ல இயலாது.

"கன்னியாகுமரி மாவட்டத்தில் கேரள எல்லையோரமாக மட்டும் நக்சலைட்டுகள் செயல்படுவதாகக் கூறப்படுகிறது; ஆனால் அங்கு அவர்களின் இரகசியத் தளம் உள்ளதா என்பது பற்றித் தகவல் இல்லை.

"ஆயினும், சென்னையைச் சுற்றியுள்ள தொழிற்சாலைப் பகுதிகளிலும், மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் அவர்களது நடமாட்டம் பற்றித் தகவல் வந்திருக்கிறது."

வசதி அளித்தும் பயனில்லை

'ஊக்கம் காட்டுவது குறைவாக இருக்கிறது'

திருச்சி, அக். 22—

"புதிதாக சிறு கைத்தொழில்களைத் துவக்குவதற்கு அரசு எவ்வளவோ சலுகைகளையும் வசதிகளையும் அளித்த போதிலும், இத்துறையில் ஊக்கம் காட்டுபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது"

என்று சிறு கைத்தொழில்கள் கழகத்தின் (சென்னை) இயக்குநரான சி. ஜகன்னாதாச்சாரி வருத்தம் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"தொழில் துறையில் நாடு முன்னேற்றம் அடைவதற்கு சிறு கைத்தொழில்களின் வளர்ச்சி மிகவும் முக்கியமாகும்; இத்துறையில் இன்னும் பலர் இறங்க வேண்டும். ஏற்கனவே இத்துறையில் உள்ளவர்கள் இதன்மூலம் தமக்குக் கிடைக்கும் இலாபங்களை வேறு வழிகளில் திருப்பாமல், மீண்டும் அதனை விரிவுபடுத்துவதற்கே பயன்படுத்த வேண்டும்."

தீண்டாமையை ஒழிக்கத் தீவிரப் பணி

சென்னை, அக். 22—

"வட்ட—மாவட்ட—மாநில அளவில் தீண்டாமை ஒழிப்புப் பணியை இன்னும் சிறப்பான முறையில் செயல்படுத்த தாழ்த்தப்பட்டோர் நல வாரியங்கள் ஏற்படுத்தப்படும்"

என்று தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், நேற்று சட்டமன்ற மேலவையில், திரு. எம். ஆறுமுகசாமியின் (சோஷ) கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது :—

"வட்ட அளவில் இயங்கும் வாரியத்தில் அரசாங்கம் உறுப்பினர்களை நியமிக்கும். தனித் தாசில்தார் (அரிசன நலத் துறை), ஊராட்சி ஒன்றிய ஆணையர், போலீசு சூப்பிரண்டெண்டு ஆகியோர் மேற்படி வாரியத்தில் அதிகாரபூர்வமான உறுப்பினர்களாகப் பணியாற்றுவர்.

"மாவட்ட மட்ட வாரியத்தில், மாவட்டக் கலெக்டர், போலீசு சூப்பிரண்டெண்டு, மாவட்டத் தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அரசு அதிகாரி — மற்றும் தாலுகா போர்டு தலைவர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

"மாநில மட்ட வாரியத்தில் தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தலைமையில், சமூக நலத் துறைச் செயலாளர்—உள்துறை அரசுச் செயலாளர்—போலீசு ஐ.ஜி., தாழ்த்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் ஆகியோரும், மற்றும் 7 அல்லது 9 அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்களும் அங்கம் வகிப்பார்கள்; இவர்களை அரசாங்கம் நியமிக்கும்.

"இவை அனைத்தும் ஒருங்கிணைந்து செயலாற்றித் தீண்டாமை ஒழிப்புப் பணியை இன்னும் தீவிரமான முறையில் ஆற்றும்."

'இரண்டே நிமிடங்களில் இந்திய விமானங்கள் செயலில் இறங்கும்'

'பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை முறியடிக்கப் போர்ச் சாதனங்கள் தயாராக இருக்கிறது'

'ஒரு முனையில் மட்டுமே இந்திய இராணுவம் செயல்படாது'-- பாதுகாப்புத் துணையமைச்சர் வி. சி. சுக்லா தரும் உறுதி

ஐதராபாத் அக். 22

"பாகிஸ்தான் அபாயத்தைச் சமாளிக்க இந்தய விமானப் படை தயாராக இருக்கிறது; எச்சரிக்கை செய்தவுடன் விமானங்கள் செயலில் இறங்க இரண்டு நிமிடங்களுக்கு மேல் ஆகாது.

"இந்தியாவின் போர்ச் சாதனம் முற்றிலும் தயாராக இருக்கிறது; பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு நடந்தால் அதை முறியடிக்கும் உத்தரவுக்கு அது காத்திருக்கிறது.

"பாகிஸ்தான் தாக்கினால் ஒரு முனையில் மட்டுமே இந்திய இராணுவம் செயல்படாது.

"போர் மூண்டால் வர்த்தகக் கப்பல்களை இந்தியக் கடற்படை காத்து -- வங்காளக் குடாக்கடல் வழியாகப் பொருட்கள் செல்வதைத் தடுக்கும்; கடற்படைக் கண்ணோட்டத்தில் கவலைப்பட ஒன்றுமில்லை.

"போர் மூண்டு -- இறக்குமதி செய்யப்படும் சில ஆயுத பாகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டால், இந்தியப் பாதுகாப்புப் பலம் குறிப்பிடத்தக்கதாக பாதிக்கப்பட மாட்டாது"

என்று பாதுகாப்புத் துணையமைச்சர் வி. சி. சுக்லா, 'தளவாட உற்பத்தியும் தயார் நிலையும்' என்பதுபற்றிய டெலிவிஷன் நிகழ்ச்சியில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் சுட்டிக்காட்டி உறுதி கூறினர்.

இராணுவ அதிகாரிகள் தீவிர ஆலோசனை நடத்தினர்.

பிரோஸ்பூர் -- அமிர்தசரஸ் அதிகாரிகள் நடவடிக்கை

பிரோஸ்பூர், அமிர்தசரஸ் மாவட்ட அதிகாரிகள் சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பிரோஸ்பூரில் பாலங்கள் போன்ற அமைப்புகளைக் காக்க ஊர்க் காவல் படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

யாகியா கானின் போர் நடவடிக்கை -- எல்லைப் பகுதியில் பயணிகள் இரயில் ரத்து

ஜம்மு, அக். 22—

ஜம்மு எல்லைக்கு அருகில் பாகிஸ்தானில் உள்ள சியால் கோட் -- நரோவல் பிரிவில் ஓடும் எல்லாப் பயணிகள் இரயில்களையும் பாகிஸ்தான் இராணுவம் ரத்து செய்துவிட்டது.

"அக்டோபர் 15-லிருந்து நரோவல் பிரிவில் பிரயாணி இரயில்கள் ஓடவில்லை" என்று எல்லைக்கு

(8-ம் பத்தி பார்க்க)

காஷ்மீரில் ஆலோசனை

ஜம்மு எல்லையில் பாகிஸ்தான் படைக் குவிப்பினால் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமை பற்றி ஜம்மு டிவிஷன் உயர் அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர்.

சிவில் பாதுகாப்பு ஏற்பாடுகளை முடுக்கிவிடப் பல்வேறு நடவடிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன.

நாச வேலைக்காரர்கள் பற்றி சிவில் பாதுகாப்பு வார்டன்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு வங்கத்தில் ஆலோசனை

மேற்கு வங்கத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது பற்றி ஆலோசனை செய்ய உயர் சிவில் --

இராஜஸ்தான் எல்லையோர மாவட்டங்கள்

மூத்த அமைச்சர்கள் பொறுப்பில் ஒப்படைப்பு

கங்காநகர், அக். 22—

பாகிஸ்தானையொட்டி இராஜஸ்தான் – எல்லையோரத்தில் உள்ள கங்கா நகர் -- பிகானீர் -- ஜெய்சால்மர் -- பார்மர் ஆகிய நான்கு மாவட்டங்களின் மூத்த அமைச்சர்கள் நால்வர் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவைகளில் கங்காநகர், பார்மர் ஆகிய மாவட்டங்களின் எல்லைக்கு அருகில் பாகிஸ்தான் படைக் குவிப்பு மிக அதிகம் என்று கூறப்படுகிறது.

இந்த மாவட்டங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கண்ட நான்கு அமைச்சர்களும் கவனித்துக் கொள்வார்கள்; அவசியம் ஏற்படும்போது தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே முடிவெடுக்க அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளை தளர்த்த இயலாது

ஜெகஜீவன்ராம் உறுதி

ஐதராபாத், அக். 22—

"பாகிஸ்தானின் எந்த நடவடிக்கையையும் உறுதியுடன் சமாளிக்கப் போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

"நிலைமை மிக மோசமானதாகவே இருக்கிறது; இந்திய எல்லையில் ஏற்பட்டுள்ள அபாயத்தை எதிர்த்து நிற்க--முழுத் தேவைகளையும் நிறைவு செய்ய இராணுவத் தளவாட உற்பத்தி முடுக்கிவிடப்பட்டிருக்கிறது"

என்று பாதுகாப்பு அமைச்சர் ஜெ ஜீவன்ராம் உறுதியுடன் தெரிவித்தார்.

பாதுகாப்புத் துறை பற்றிய நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பேசுகையில், மேலும் அவர் கூறியதாவது:—

"இந்தியாவின் செயலுக்காக அல்லாமல் கிழக்கு வங்கத் தேச விடுதலை வீரர்கள் கிளர்ச்சி செய்வதற்காக இந்தியாமீது முழுப் போர் தொடுக்கப்போவதாக அதிபர் யாகியா கான் மிரட்டியிருக்கிறார்; மற்றும் படை வீடுகளிலிருந்து மேற்கு எல்லைக்கு தன் இராணுவம் செல்லவும் அவர் உத்திரவிட்டிருக்கிறார்; ஆகவே, மேற்கு எல்லைக்கு நமது படைகளை அனுப்புவதைத் தவிர வேறு வழி ஏது?

"இந்த நிலையில் பாகிஸ்தான் அபாயம் நீடிக்கும் வரை நமது பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை தளர்த்துவது இயலக் கூடியதல்ல."

தொழிற் சங்க விவகாரங்களில் தலையிட வேண்டிய தேவையே எங்களுக்கு இல்லை

பிற தலைவர்களிடம் திருப்தி ஏற்படாததே தி. மு. கழகத் தொழிற் சங்கத்துக்குத் தொழிலாளர்கள் வரக் காரணமாகும்

சென்னை, அக். 21—

"தொழிற் சங்க விவகாரங்களில் தலையிட்டுத்தான் தி.மு. கழகத்தைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற நோக்கம் எங்களுக்குக் கிடையாது.

"தி.மு. கழகத் தொழிற் சங்கத்தில் அதிகத் தொழிலாளர்கள் வந்து சேருகிறார்கள் என்றால் அதற்குக் காரணம், ஏற்கனவே இருந்த தொழிற் சங்கத் தலைவர்களிடம் அவர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை என்பதுதான்.

"அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தியோ -- வேறு வழிகளிலோ தமிழகத்தில் தொழிற் சங்கங்களைக் கைப்பற்ற வேண்டிய நிலைமையில் தி.மு. கழகம் இல்லை.

"தொழிலாளர்களுக்கு நியாயமான பல கோரிக்கைகள் உண்டு; தொழிலாளர்களின் நலனில் இந்த அரசுக்குத் தனி அக்கறை உண்டு; 'தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிர்வாகத்துடன் சுமூகமாகப் பேசித் தீர்வு காண வேண்டும்' என்பது தான் எங்களது நோக்கமாகும்.

"வன்முறைக்கு இடமிருக்கக் கூடாது; அதே சமயத்தில் தொழிலாளர்கள் தங்கள் நியாயமான உரிமைகளை -- கோரிக்கைகளை இழந்துவிடக்கூடாது; இதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருக்கும்.

"தி.மு. கழகம் என்றுமே வன்முறையை விரும்பியதில்லை; வன்முறை மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதாக இருந்தால், 1965-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போதே ஆட்சியைக் கைப்பற்றியிருப்போம்.

"தமிழ்நாட்டில் தொழில் அமைதி நிலவுவதற்குத் தொழிற்சங்கத் தலைவர்களின் ஒத்துழைப்பே முக்கியக் காரணம்; பிரச்சினைகளைப் பேச்சு மூலம் தீர்த்துக்கொள்வதில் தொழிற்சங்கத் தலைவர்கள் முக்கிய முயற்சி எடுத்துக்கொள்வது பாராட்டுக்குரியது."

---முதலமைச்சர் கருணாநிதி

('இந்து' இதழ் ஊழியர் சங்க ஆண்டு விழாவில்)

விவசாயிகளின் வருவாய் பன்மடங்கு பெருக வாய்ப்பு

உலகில் தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்க இயலும்

கூட்டுறவு வங்கிகளின் மூலம் திட்டமிட்ட பணி-- அமைச்சர் சி. பா. ஆதித்தனார் வேண்டுகோள்

சென்னை, அக். 22—

"வேளாண்மையில் வருமானத்தைப் பெருக்கி -- மூன்று போகம் விளைவிக்க இயலும்; வேளாண்மைத் தொழிலையும் ஓர் ஆலைபோல் நடத்த முடியும்.

"ஒரு சாதாரண விவசாயியின் ஆண்டு வருமானம் ரூ. 500-லிருந்து மூவாயிரம் -- நாலாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டால், உலகிலேயே தமிழகம் தலைநிமிர்ந்து நிற்க முடியும்; அதற்குக் கூட்டுறவு வங்கிகள் ஊக்கம் தரவேண்டும்"

என்று கூட்டுறவுத் துறையமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மத்திய கூட்டுறவு வங்கிகளின் தலைவர்கள் கருத்தரங்கு சென்னையில் மூன்று நாட்கள் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கைத் துவக்கி வைத்துப் பேசுகையில் அமைச்சர் ஆதித்தனார் மேலும் கூறியதாவது:—

"கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகள் நல்ல முறையில் செயல்பட்டு அதிக இலாபம் பெற்றிருக்கின்றன.

இலாபம் என்பது தவறல்ல -- கொள்ளை இலாபம்தான் தவறு!

10 ஆண்டுகளாகத் தொடர்ந்து நட்டத்தில் நடந்தால் ஒரு சமயம் அதை மூடக்கூட வேண்டிய நிலைமை ஏற்படும்; இதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

வங்கிகளுக்கு இலாபம் என்பது உயிர்; இலாபத்தோடு நடக்க வேண்டும் -- என்ற குறிக்கோள் இருக்கவேண்டும்.

பணத்தைவிட மக்களின் நம்பிக்கைதான் வங்கிகளின் மூலதனம்.

நம்பிக்கை என்பது பட்டு நூலைப் போல இருக்கும்; அது அறுந்துவிடாமல் இலாபத்தோடு நடந்து, கொஞ்சமாவது 'டிவிடெண்ட்' தரவேண்டும்!

16 மத்திய வங்கிகளில், 4 வங்கிகள்தான் 'டிவிடெண்ட்' தர இயலாத நிலையில் இருக்கின்றன.

1969—70-ம் ஆண்டில் மாநிலக் கூட்டுறவு வங்கி ரூ. 32 இலட்சம் இலாபம் பெற்றது; இந்த ஆண்டு அது ரூ. 36 இலட்சமாக உயர்ந்திருக்கிறது.

கடந்த ஆண்டில், 16 மாவட்ட மத்திய வங்கிகளின் இலாபம் ரூ. 113 இலட்சமாக இருந்தது; அது இப்போது ரூ. 138 இலட்சமாக உயர்ந்துள்ளது; இதற்காக அதிகாரிகளையும், தலைவர்களையும் பாராட்டுகிறேன்.

ரிசர்வ் வங்கியின் கவர்னர் கடந்த வாரம் இங்கு வந்திருந்தார்; அவருடன் நான் 3-மணி நேரம் பேசிக் கொண்டிருந்தேன்; 'ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய காலப் பயிர்க் கடனில் 69 சதவிகிதம்தான் நீங்கள் வாங்கியிருக்கிறீர்கள்; இதற்கு என்ன காரணம்?' என்று அவர் கேட்டார்.

இதற்கான காரணத்தை இந்தக் கருத்தரங்கில் நீங்கள் ஆராய வேண்டும்; தமிழ்நாட்டின் மீது ரிசர்வ் வங்கிக்கு நல்லெண்ணம் இருக்கிறது; நாம் எவ்வளவு கேட்டாலும் தரத் தயாராக இருக்கிறார்கள்; இதற்குக் காரணம், நம்முடைய நாணயம் தான்!

ஆனால், அவர்கள் ஒதுக்கிய பணத்தைக்கூட முழுமையாகப் பெற்று விவசாயிகளுக்குத் தரவில்லை; இந்த ஆண்டிலாவது முழு அளவையும் பெற்று விவசாயிகளுக்குத் தரவேண்டும்.

நமது வங்கிகள் இலாபத்தில் நடந்தாலும், கிளைகள் திறப்பதில் பின்தங்கித்தான் இருக்கின்றன; மத்திய வங்கிகள் அதிகக் கிளைகளைத் திறக்க முற்படவேண்டும்; கிளைகள் திறக்க அரசாங்கம் இனமாகப் பண உதவி செய்து வருகிறது.

"திறக்கப்படும் கிளைகள் ஓர் அஞ்சல் நிலையமாக இல்லாமல், அதிக அதிகாரம் அவைகளுக்குத் தரப்பட வேண்டும்" என்று ரிசர்வ் வங்கி அதிகாரிகள் என்னிடம் சொன்னார்கள்.

சூபர்வைசர் யூனியன் வேலைகளை இந்தக் கிளைகள் செய்யவேண்டும்; இந்த யூனியன்களைக் கலைத்துவிடலாம்.

டிபாசிட்டுகளைக் கிராம மக்களிடமிருந்து அதிகமாகப் பெற முயற்சி எடுக்க வேண்டும்; கிராம மக்களுக்கு, டிபாசிட் செய்யக் கிராமக் கூட்டுறவுச் சங்கத்தின்மீது நம்பிக்கை இருப்பதில்லை.

கிராம மக்களுக்கு மாநில வங்கியின்மீது நம்பிக்கை இருக்கிறது.

கிராம நாணயச் சங்கம் பெறும டிபாசிட்டுக்கு மாநில வங்கி இரசீது தர முடியுமா -- என்று ரிசர்வ் வங்கிக்குக் கடிதம் எழுதிக் கேட்டேன்; இதில் சட்டச் சிக்கல் இருப்பதாகச் சொன்னார்கள்; ஆனால், 'மத்திய வங்கிகள் இரசீது தரலாம்' என்று அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

அரசு உத்தரவாதத்துடன் மத்திய வங்கிகளில் டிபாசிட்டுகளைக் கிராமங்களில் விற்கலாம்; இதற்காகக் கிராமச் சங்கங்களுக்கு அரை சதவிகிதம் அல்லது ஒரு சதவிகிதம் பரிசாகக் கொடுக்கலாம்.

இப்படிச் செய்தால், இப்போதிருக்கும் டிபாசிட்டு ரூ. 30 கோடியிலிருந்து ரூ. 60 கோடியாக ஆகும்.

எப்படி இந்த டிபாசிட்டுகளை விற்பது என்பது பற்றி இந்தக் கருத்தரங்கில் ஆராய்ந்து முடிவு எடுங்கள்.

(1-ம் பத்தி தொடர்ச்சி)

அப்பாலிருந்து வந்த நம்பகமான தகவல் கூறியது

1965 செப்டம்பரில் சியால் கோட் பகுதியில் இந்திய இராணுவம் நுழைந்தபோது அந்த இரயில் பாதையின் ஒரு பகுதியும், அல்சர் இரயில்வே நிலையமும் இந்திய இராணுவத்திடம் வீழ்ச்சியடைந்தது. சுமார் 6 மாத காலம் இந்திய இராணுவத்திடம் அது இருந்தது

கடந்த இரு நாட்களில் ஜலாலாபாத் பிரிவில் டாங்கிகளையும் -- ஏராளமான துருப்புகளையும் பாகிஸ்தான் அனுப்பி வந்துள்ளது.

அப்பகுதிகளில் உள்ள கிராமங்களிலிருந்து சிவிலியன்களை வெளியேற்றி -- ரஜாக்கர்களை, அங்கு பாகிஸ்தான் குடி புகுத்தியிருக்கிறது.

போர்க்கள தலைமைச் செயலகம்

கிழக்கு வங்காளத்தில் ட்ஸ்சருக்கும் -- நவரோனுக்கும் இடையில் உள்ள 'ஜினைதா' என்னும் இடத்தில் போர்க்களத் தலைமைச் செயலகத்தைப் பாகிஸ்தான் அமைத்துள்ளதாக கிருஷ்ணாநகருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

ஜெஸ்சூர், குஷ்டியா, பரீத்பூர், குல்னா ஆகிய மாவட்டங்களுடன் சாலை மூலம் ஜினைதா இணைந்துள்ளது.

அணிகலன் தொழிலாளர்கள் கொண்டாடிய அண்ணா விழா

தென்னக அணிகலத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் ஆண்டுதோறும் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா நடைபெறுவதைப்போல் இவ்வாண்டும்சென்னை 39-வது வட்டப் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை பூக்கடைக்கு அருகில் 30—9—71 காலை10-மணியளவில் விழா நடைபெற்றது.

நாதசுர இசையுடன் திரு. ந. சேதுராசன் தலைமையில் சி. பஞ்சாட்சரம் கழகக் கொடி ஏற்றி வைத்து உரையாற்றினர்.

நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் அறிஞர் அண்ணா படத்தைத் திறந்துவைத்து 500 ஏழைகளுக்கு உணவு வழங்கினர்.

திரு. டபிள்யூ. பி. பி. சுந்தரம், வ. மணிவண்ணன், ஆ. செ. சேசாசலம், கே. எம். நரசிம்மன், ஊ. சம்பந்தமூர்த்தி, ம. ஆ. நாதன் ஆகியோர் அறிஞர் அண்ணா அவர்களின் பெருமைகளை விளக்கிப் பேசினர். கே. கே. குப்புசாமி நன்றி கூறினர்.

தமிழுக்கு ஏற்றம் அளிக்கும் அரசு

தமிழ் மக்களுக்குக் கிடைத்த நல்வாய்ப்பு

கழக ஆட்சிபற்றி செட்டிநாட்டரசர் முத்தையா; கலைஞருக்குப் பாராட்டுரை

சென்னை, அக். 22—

"இன்று தமிழ் ஆய்ந்த தமிழர்கள், ஆட்சிக்குத் தலைவர்களாக விளங்கித் தமிழ் அறிஞர்களை ஊக்கப்படுத்தி வருகிறார்கள்; இது தமிழ் மக்களுக்குக் கிடைத்த நல்வாய்ப்பாகும்; இந்த ஆட்சிக் காலத்தில் தமிழுக்கு மிகப் பெரிய ஏற்றம் கிடைக்கும்"

என்று செட்டிநாட்டரசர் எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் கூறினர்; தமிழ் ஆராய்ச்சி அறிஞர்கள் பேரவை சார்பில் கலைஞருக்குப் நடத்தப்பட்ட பாராட்டு விழாவிற்குத் தலைமை ஏற்று அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"முத்தமிழுக்கு நமது முதல்வர் ஆற்றியிருக்கும் தொண்டினை இங்கு எடுத்துக் காட்டுவது அவசியமில்லை; தமிழ்நாட்டுப் பற்றுமிக்க தேச பக்தர் அவர்; தமிழ் இசை -- தமிழ் சிறு கதைகள் -- தமிழ்க் கவிதை இவற்றில் தேர்ச்சி பெற்றவர்.

அண்மைக் காலத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பெருந்தொண்டு குறித்து என்னைக் காட்டிலும் சிறந்த தமிழ் அறிஞர்கள் சான்று கூறுவார்கள்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் தமிழ் அறிஞர்களை அப்போதிருந்த மன்னர்களும் -- ஜமீன்தார்களும் பேணி வந்தனர்; அந்தக் காலம் கடந்துவிட்டது; இன்று அரசுதான் அந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

இன்று தமிழாய்ந்த தமிழர்கள் ஆட்சிக்குத் தலைவராக விளங்கி -- தமிழ் அறிஞர்களை ஊக்கப்படுத்தி வருகிறார்கள்; இது தமிழ் மக்களுக்குக் கிடைத்த நல்வாய்ப்பாகும்.

தமிழ் அறிஞரும், தமிழ் மொழி -- தமிழ் இசை -- தமிழ்க் கவிதை ஆகியவற்றின்மீது பற்றுக் கொண்டவர்களும் ஆட்சித் தலைமையை ஏற்பது நாமெல்லாம் பெருமைப்படத்தக்க ஒன்றாகும்; அதிலும் நமது ஆளுநர் தமிழ்ப் படித்து வருவது நமக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கும் ஒன்று.

இந்த ஆட்சிக் காலத்தில், தமிழுக்கு மிகப் பெரிய ஏற்றம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் மொழி ஏங்கிக் கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது; அதன் பின்னர்தான் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் தொடங்கியது.

இன்று தமிழுக்கு ஏற்றம் கிடைத்திருக்கிறது; கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வீற்றிருக்கின்ற இந்தக் காலம், முத்தமிழ் முழங்கும் காலமாகும்; எனவே அவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்க முடிந்தது குறித்து நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

'டாக்டர்' பட்டம் பெறுவதற்கு நமது முதல்வர் எல்லா வகையிலும் தகுதியானவர். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட முதல்வருக்குத் 'தமிழவேள்' பட்டம் கொடுப்பதும் மிகவும் பொருத்தமாகும்.

தமிழுக்கு உழைத்த பெரும் அறிஞர்களில் அவரையும் ஒருவராக நாம் கருதுகிறோம் என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும்.

நமது முதல்வர் ஒரு சிறந்த இராசதந்திரி; அவர் ஒரு செயல் வீரர்; எந்தப் பிரச்சினையிலும் ஆற்றலுடன் விரைவான முடிவுகளை எடுப்பவர்.

பேரறிஞர் அண்ணாவின் தோழராக விளங்கிய நமது முதல்வர், 'தமிழ்நாட்டின் மிகச் சிறப்பான நிர்வாகி' என்ற புகழ்க் கொடியை மிக உயரத்தில் பறக்கவிட்டுவருகிறார்; இதற்குக் கலைஞர் அவர்களின் ஆற்றலும் -- அவரது அமைச்சர்கள் அளித்துவரும் ஒத்துழைப்பும் தான்.

தமிழ் மொழி -- தமிழ்ப் பண்பு -- தமிழ் இசை என்று பல்வேறு துறைகளுக்கும் முதல்வர் ஆற்றிய பெரும் பணிக்காக அவரைப் பாராட்டுகிறோம்.

தமிழ்நாட்டுக்கும் – தமிழ் மொழிக்கும் பாடுபட்ட அனைவருக்கும் இந்தப் பாராட்டுக்கள் உரியனவாகும்; அதற்கு அடையாளமாகவே முதல்வரைப் பாராட்டுகிறோம்.

அரசாங்கத் துறையில் முதல்வர் சாதித்த சாதனைகளுக்காக நாம் இதற்கு முன்பும் பாராட்டியிருக்கிறோம்; இதற்குப் பின்னரும் அவரைப் பாராட்ட பல வாய்ப்புக்கள் கிடைக்கும்.

இன்று நம் நாட்டில் -- தமிழகத்தில் ஒரு நிலையான அரசு அமைந்திருக்கிறது; இந்த அரசு நீண்ட நாட்களுக்கு ஆட்சி நடத்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நீதிக் கட்சி பொன் விழாவில் கலந்து கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள், கழக அரசை, 'நீதிக் கட்சியின்' அரசு என்றே வர்ணித்தார்கள்.

நீதிக் கட்சியின் நீதிக் கொள்கைகளையும், திராவிடர் கழகத்தின் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களையும் கழக அரசு செயல்படுத்திவருகிறது.

இது குறித்து நாம் எல்லோரைக் காட்டிலும் ஆளுநர் ஷா அவர்கள்தான் மகிழ்ச்சியடைய வேண்டும்.

ஏனெனில், இந்த மாநிலத்தில் கட்சி விட்டுக் கட்சித் தாவும் நோய் இல்லை; சட்டமன்றத்தைக் கலைப்பது—குடியரசுத் தலைவர் ஆட்சியை அறிமுகப் படுத்துவது போன்ற தொல்லைகள் ஏதும் இங்கு இல்லை.

முதல்வரைப் பாராட்டுகிறோம் என்றால், வளமிக்க எதிர்காலத்துக்கு வாழ்த்துக் கூறுகிறோம் என்று பொருள்.

தமிழுக்கு அவர் ஆற்றிவருகிற மகத்தான தொண்டுக்காக நாம் மீண்டும் மீண்டும் அவரைத் தொடர்ந்து பாராட்டிவருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

சமாதான நோபல் பரிசு

36 ஆண்டுக்குப் பின் ஜெர்மானியர் பெறுகிறார்

ஆஸ்லோ, அக். 21—

மேற்கு ஜெர்மன் தலைமையமைச்சர் வில்லிபிராண்டுக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

1935-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு ஜெர்மானியருக்கு இந்தப் பரிசு இப்போதுதான் கிடைத்துள்ளது

1935-ல் இரு உலகப் போர்களுக்கிடையில், ஜெர்மன் சமாதான இயக்கத் தலைவரான கார்ல் அசிடெக்ஸ்கி என்பவருக்கு இந்தப் பரிசு அளிக்கப்பட்டது; மூன்று ஆண்டுக்குப் பிறகு அவர் நாஜி சிறை முகாமில் மாண்டார்.

கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்டு நாடுகளுடன் சமரசம் காணும் கொள்கையைக் கடைபிடிப்பவர் வில்லி பிராண்ட்.

'முன்னாள் பகைவர்களான நாடுகளுடன் சமரசம் காண நேசக்கரம் நீட்டியவர் இவர்' என்றும், ஐரோப்

(8-ம் பத்திப் பார்க்க)

அறுவைச் சிகிச்சை செய்துகொள்வோருக்கு ரூ. 1,000 வரை பெற வாய்ப்பு

செங்கற்பட்டு மாவட்டத்தில் தீவிர இயக்கம் -- பரிசுகள் அறிவிப்பு

குடும்ப நலத் திட்டத்தை மக்களை ஏற்கச் செய்வதில் திருப்புமுனையாக அமைந்துவிட்ட 'தீவிர குடும்ப நலத் திட்ட இயக்கம்' செங்கற்பட்டு மாவட்டத்தில் 17-10-71 முதல் 9-12-71 வரை செயல்படுத்தப்படுகிறது.

முற்பகுதி—தீவிர குடும்ப நலத் திட்டப் பிரச்சார இயக்கமாகவும், பிற்பகுதி—'சேவை இயக்க'மாகவும் செயல்படுத்தப்படும்.

இத்தீவிரத் திட்டத்தைச் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் செயல்படுத்துவதற்காக மாவட்டம் நான்கு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அதிகாரி, உதவி மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை அதிகாரிகள் ஆகியோரின் பொறுப்பில் இந் நான்கு பகுதிகளிலும் திட்டம் செயல்படுத்தப்படும்.

தீவிர குடும்ப நலத் திட்டப் பிரச்சார இயக்கத்தின்போது மாவட்டம் முழுமையிலும் குடும்ப நலத் திட்ட விளம்பரச் சுவரொட்டிகள் ஒட்டப்படும். ஏறத்தாழ 10,000 குடும்ப நலத் தகரத் தகடுகள் சாலை பருங்குள்ள மரங்கள் ஈருக அனைத்து இடங்களிலும் அடிக்கப்படும்.

சிறு சிறு கூட்டங்கள்—கலை நிகழ்ச்சிகள்— நாடகங்கள் — வில்லுப் பாட்டு—கதாகாலட்சேபம்— இசை நிகழ்ச்சி — திரைப் படக் காட்சி ஆகியவை, சிற்றூர் -- பேரூர்களிலெல்லாம் நடத்தப்படும்.

மாவட்டம் முழுமையிலும் உள்ள திரையரங்குகள் அனைத்திலும், தீவிர குடும்ப நலத் திட்ட இயக்கச் 'சிலைடு'கள் காண்பிக்கப்படும்.

வீடு வீடாகச் சென்று குடும்ப நல ஊழியர்கள் விளக்கம் தருவர்; 'சிறு குடும்ப நெறியின்' சிறப்பினையும், மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் சிக்கல்களையும் விளக்கி—எதிர்கால வாழ்வு வளமாக அமைவதற்கு வழிகோலுவர்.

தகுதிவாய்ந்த தாய்மார்களுக்கும் —தந்தைமார்களுக்குமாகச் சேர்த்து மொத்தம் ஐம்பதாயிரம் பேருக்கு செங்கை மாவட்டம் முழுமையிலும் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

தீவிர குடும்ப நலத் திட்ட இயக்கத்தையொட்டி, குடும்ப நல அறுவை சிகிச்சைக்குள்ளாவோருக்கெனப் பரிசுத் திட்டம் ஒன்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது' அதன்படி, முதல் பரிசு ரூ. 1,000 ஒருவருக்கும், இரண்டாம் பரிசு ரூ 500 இருவருக்கும், மூன்றும் பரிசு ரூ. 250 நான்கு பேருக்கும், நான்காம் பரிசு ரூ. 100 பத்துப் பேருக்கும்—ஆக மொத்தம் 17 பரிசுகள் வழங்கப்படும்.

அறுவைச் சிகிச்சை செய்து கொள்வோருக்குக் காட்டப்படும் தனிச் சலுகைகள் வருமாறு:—

மருத்துவமனை சென்று திரும்ப இலவச வாகன வசதி.

மருத்துவமனையில் ஆறு நாட்கள் தங்கியிருந்து ஓய்வுபெற வசதி.

மருத்துவமனையில் இலவச உணவு வசதி.

மருத்துவரின் தனிக் கவனம்.

வழக்கமான இலவச ஈட்டுத் தொகை ரூ. 30.

ஓர் ஆண்டுக்குத் தனி மருத்துவச் சலுகை (அடையாளக் கார்டு கொடுக்கப்படும்).

பெண்களுக்கு ஒரு புடவை.

ஆண்களுக்கு ஒரு வேஷ்டி.

சேலத்தில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்

20 வது வட்டத்தில்

சேலம் நகர 20-வது வட்டத்தில் ஈசன் அற நிதியின் சார்பாக 26—9—71 அன்று அண்ணா பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

இல்லங்கள்தோறும் இனிப்புப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

விழாவிற்கு ஈசன் அற நிதியின் தலைவர் கே. துரைசாமி எம்.சி. தலைமை தாங்கினர்.

கே. செயராமன் எம்.எல்.ஏ. இல்லந்தோறும் இனிப்புப் பொட்டலங்கள் வழங்குவதைத் தொடங்கி வைத்தார்.

தோழர்கள் பி. எஸ். மாணிக்கம் எம்.சி., கே. எஸ். மணி எம்.சி., எஸ். ஏ. குமாரசாமி எம்.சி., கே ஜெயராமன் எம்.எல்.ஏ., கே. துரைசாமி எம்.சி. ஆகியோர் பேசினர்.

சேலம் நகர 20-வது வட்டம் தி. மு. க. சார்பில் விழா கொண்டாடப்பட்டது; கே. துரைசாமி எம்.சி. தலைமை தாங்கினர்; கே. செயராமன் எம்.எல்.ஏ உணவு வழங்கினர்; தோழர்கள் பி. எஸ் மாணிக்கம் எம்.சி., கே.எஸ். மணி எம்.சி., எஸ் ஏ. குமாரசாமி எம்.சி. மற்றும் பலர் பேசினர்.

மேலும் 20-வது வட்டத்தில் இராசாராம் நற்பணி மன்றத்தின் சார்பில் திரு. பி. ஆர். சலாம் தலைமையிலும், அண்ணா நற்பணி மன்றத்தின் சார்பில் திரு. இராமமூர்த்தி தலைமையிலும் விழா கொண்டாடப்பட்டது. மேலும் 1,000 பேருக்கு உணவு வழங்கப்பட்டது.

18-வது வட்டத்தில் கே. துரைசாமி எம்.சி. தலைமையில் விழா கொண்டாடப்பட்டது; விழாக்களில் கே. செயராமன் எம்.எல்.ஏ. கே. துரைசாமி எம்.சி., பி. எஸ். மாணிக்கம் எம்.சி., கே. எஸ் மணி எம்.சி., எஸ். ஏ. குமாரசாமி எம்.சி., க. இரத்தினம், ஜி ஆர். சந்திரய்யர் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

22-வது வட்டத்தில்

சேலம் 22-வது வட்டத்தில் கிளைக் கழகங்கள் சார்பில் விழா கொண்டாடப்பட்டது; எஸ். ஏ சண்முகம் தலைமை வகித்தார்.

நகரக் கழக அவைத் தலைவர் பி. எஸ் மாணிக்கம் கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினர்; எஸ் ஏ. குமாரசாமி எம்.சி., கல்யாணசுந்தரம் எம்.சி. ஆகியோர் பேசினர்; இனிப்பு வழங்கப்பட்டது.

எம். ஜி. ஆர். நற்பணி மன்றச் சார்பில் விழா நடைபெற்றது; கழகக் கொடியை பி. எஸ். மாணிக்கம் எம்.சி. ஏற்றிவைத்துப் பேசினர்; மற்றும் எஸ் ஏ. குமாரசாமி எம்.சி., பழனிசாமி, எஸ். ஏ. சண்முகம் ஆகியோரும் பேசினர்.

நஞ்சம்பட்டிச்சேரியில் விழா நடைபெற்றது; கழகக் கொடியை பி எஸ். மாணிக்கம் ஏற்றிவைத்துப் பேசினர்; மற்றும் எஸ். ஏ. குமாரசாமி, ஈ. ஏ. ஆர். மாரியப்பன், எஸ். ஏ. சண்முகம் ஆகியோர் பேசினர்; இனிப்பு வழங்கப்பட்டது.

அம்மாப்பேட்டையில்:

அம்மாப்பேட்டையில் அண்ணா படம் அலங்கரிக்கப்பட்டுத் தாரை தப்பட்டை மேள வாத்தியங்களுடன் ஊர்வலம் நடைபெற்றது; அண்ணா சிலைக்கு சே. செயராமன் எம் எல்.ஏ. மாலை அணிவித்தார்.

பொன்னம்மாபேட்டையில்:

17-வது வட்ட தி. மு க. சார்பில் விழா நடைபெற்றது; திரு நாராயணன் தலைமை வகித்தார்; கே. துரைசாமி எம்.சி. கழகக் கொடியை ஏற்றிவைத்தார்; கே. செயராமன் எம்.எல்.ஏ., பி. எஸ். மாணிக்கம் எம்.சி., எஸ். ஏ. குமாரசாமி எம்.சி., இராசமாணிக்கம் ஆகியோர் பேசினர்; வட்டச் செயலாளர் சந்திரய்யன் இனிப்பு வழங்கினர்.

18-வது வட்டத்தில் அண்ணா விழா நடைபெற்றது; செயலாளர் இரத்தினம் தலைமை வகித்தார்; சட்டமன்ற உறுப்பினர் கே. செயராமன் கழகக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினர்; இனிப்பு வழங்கப்பட்டது.

19-வது வட்டத்தில் அண்ணா பிறந்த நாள் விழா நடைபெற்றது; அண்ணா படம் அலங்கரிக்கப்பட்டு வட்டம் முழுவதும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது; இனிப்பு வழங்கப்பட்டது.

26-வது வட்டத்தில்:

நண்பர்கள் கழகச் சார்பில் விழா கொண்டாடப்பட்டது; வட்டச் செயலாளர் ஏ. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்; கழகக் கொடியைச் சிற்றுளி சுப்பிரமணியம் ஏற்றிவைத்துப் பேசினர்; மற்றும் பி. எஸ் மாணிக்கம் எம்.சி., எஸ். ஏ. குமாரசாமி எம்.சி. ஆகியோர் பேசினர்; இனிப்பு வழங்கப்பட்டது.

26-வது வட்ட மாணவர்கள் சார்பில் விழா கொண்டாடப்பட்டது; பி. எஸ். மாணிக்கம் தலைமை வகித்தார்; கே. செயராமன் கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினர்; மற்றும் கே. எஸ். மணி எம்.சி., கே. துரைசாமி எம்.சி., ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

மாணவ -- மாணவிகளுக்கு பி. எஸ் மாணிக்கம் எம்.சி. நோட்டுப் புத்தகம் வழங்கினர்; இனிப்பு வழங்கப்பட்டது.

கிச்சிபாளையத்தில்:

சேலம் 27-வது வட்டத்தில், திரு. சுப்பிரமணியம் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது.

3,000 பேர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

திரு. பெ. இராசமாணிக்கம் வரவேற்றுப் பேசினர்.

நகரத் தி. மு. கழக அவைத் தலைவர் பி. எஸ். மாணிக்கம் எம்.சி. கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

திரு. கே. செயராமன் எம்.எல். ஏ. 3,000 பேருக்கு உணவு பரிமாறுவதைத் தொடக்கிவைத்துப் பேசினர்.

மற்றும் கே. துரைசாமி எம்.சி., திரு. சிந்தன் ஆகியோர் பேசினர்; பெ. இராசமாணிக்கம் நன்றி தெரிவித்தார்.

சமாதான நோபல் பரிசு...

(3-ம் பத்தித் தொடர்ச்சி)

பாவில் சமாதானத்துக்கான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய சீரிய முயற்சிகளை நல்லெண்ணத்துடன் மேற்கொண்டவர்' என்றும் நார்வே நாடாளுமன்றத்தின் நோபல் பரிசுக் குழு கூறுகிறது.

1930-ஆம் ஆண்டுக்குப் பிந்திய ஆண்டுகளில், நாஜி ஆட்சியிலிருந்து தப்பியோடிவந்து நார்வேயில் தங்கி வந்தவர் வில்லிபிராண்ட்; அவரது புதிய அரசியலுக்காக இந்தப் பரிசு தரப்படுவதாகவும் குழு கூறுகிறது.

தமிழில் தந்தி அனுப்பத் தடை என்ன?

டில்லியின் மறுப்பு--தமிழகச் சட்டப் பேரவையில் கேள்விகள்

'மீண்டும் வலியுறுத்தப்படும்' என அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா தகவல்

இந்தி மணியார்டர் பாரம் வழங்குவதற்கு கண்டனம்

சென்னை, அக். 22—

"'தமிழில் தந்தி அனுப்பும் முறை, நடைமுறையில் இயலக்கூடியதன்று' என்று கூறி -- இந்த யோசனையை மத்திய அரசு ஒப்புக்கொள்ளவில்லை; எனினும், இது குறித்து மீண்டும் மத்திய அரசிடம் வற்புறுத்தப்படும்"

என்று சட்டப் பேரவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா தெரிவித்தார்; இத்தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளும் -- அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

மல்லச்சாமி (தி.மு.க.):—"தமிழிலேயே தந்திச் செய்திகளை அனுப்புவதற்கு மத்திய அரசை இந்த அரசு கேட்டுக் கொண்டாதா?"

அமைச்சர்:—"அந்த அந்த வட்டார மொழிகளில் தந்திச் செய்திகளைப் பெற்றுக்கொண்டு அனுப்ப வசதி செய்யும்படி மத்திய அரசிடம் இந்த அரசு கேட்டுக் கொண்டது; ஆனால் அம்மாதிரி செய்வது நடைமுறையில் இயலாது என்று மத்திய அரசு அறிவித்துவிட்டது."

மல்லச்சாமி (தி.மு.க.):—"என்ன காரணத்தால், 'அது இயலாது' என்று கூறிவிட்டார்கள்? மீண்டும் இந்த அரசு வலியுறுத்துமா?"

அமைச்சர்:—"அதுபற்றி இந்த அரசு மீண்டும் வலியுறுத்தும்."

எச். வி. ஹண்டே (சுதந்தரா):—"தந்தி -- மணியார்டர் பாரங்கள், இந்தியில் மட்டும்தான் சில நேரங்களில் வருகின்றன; ஆகவே, அந்தந்த வட்டார மொழிகளிலும் -- ஆங்கிலத்திலும் கட்டாயமாக இருக்க வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்துமா?"

அமைச்சர்:—"அம்மாதிரி இந்தியில் மட்டும் இருந்தால் அது கண்டிக்கத்தக்கது; தமிழ்நாட்டில் ஆங்கிலத்திலும், தமிழ் மொழியிலும் இருக்க வேண்டும்; அப்படிக் குறை இருக்குமானால் எடுத்துக்கூறி, வட்டார மொழியிலும்--ஆங்கிலத்திலும் இருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தப்படும்."

வீராசாமி (தி.மு.க.):—"இந்தியில் மட்டும் 'தந்தி' அனுப்ப வசதி செய்து கொடுத்திருக்கும் போது, ஏன் மற்ற வட்டார மொழிகளிலும் தந்தி அனுப்ப ஏற்பாடு செய்யக்கூடாது?"

அமைச்சர்:—"அவ்வாறு செய்வது செயல் முறையில் சிரமம் என்று தெரிவிக்கப்பட்டது; பல மொழிகளில், 'டெலிபிரிண்டர்'கள் செய்வது செலவு அதிகம்; உரிய பலன் இருக்காது--என்று கூறினார்கள்; இப்போது, ஆங்கிலத்தில் --; தேவநாகரி லிபியிலும் தந்தி எழுதிக் கொடுத்தால் பெற்றுக்கொள்வார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள்."

கே. டி. கே. தங்கமணி (வலது கம்.):—"தமிழில் தந்தி அனுப்பும் இரகசிய எழுத்து முறையைத் திருச்சியில் உள்ள அரசு ஊழியர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார்; அதை எடுத்துச் சொல்லி, தமிழிலும் தந்தி அனுப்ப வசதி கேட்கப்படுமா?"

அமைச்சர்:—"இதுபற்றி மீண்டும் வற்புறுத்தும்போது இந்தத் தகவலும் எடுத்துக் கூறப்படும்."

காமாட்சி செயராமன் பதவியேற்பு

சென்னை, அக். 22—

சென்னை 19-வது வட்டத்திலிருந்து மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமதி காமாட்சி செயராமன், நேற்று மாலை நடைபெற்ற மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் பதவி உறுதி எடுத்துக்கொண்டார்; அவருக்கு மேயர் சா. கணேசன் பதவி உறுதியேற்பை நடத்திவைத்தார்.

நீண்ட கரவொலிகளுக்கிடையே பதவியேற்ற திருமதி காமாட்சி செயராமன், தமக்குரிய இடத்தில் அமர்ந்து மாநகராட்சிமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

அண்ணா கல்லறையில் ...

இடைத் தேர்தலில் தாம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டவுடனேயே திருமதி காமாட்சி செயராமன் அண்ணா கல்லறைக்குச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களையும் உடனடியாகச் சென்று சந்தித்து மாலையணிவித்து வந்தார்.

வ. உ. சிதம்பரனாரின் 100-வது பிறந்த நாள்

தேசிய விடுமுறை நாளாக அறிவிக்க டெல்லியிடம் தமிழக அரசு வற்புறுத்தும்

சட்டப் பேரவையில் முதல்வர் கருணாநிதி அறிவிப்பு

சென்னை, அக். 22—

"கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனாரின் நூறுவது பிறந்த நாள் விழாவை இந்தியா முழுவதிலும் கொண்டாடுவதற்கு – அவரது நினைவாக அன்றைய நாளை விடுமுறை நாளாக அறிவிக்கக் கோரி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்படும்"

என்று சட்டப் பேரவையில் -- கேள்வி நேரத்தின்போது முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் அறிவித்தார்.

இதன் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விகளும் -- முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

முத்தையா (சிண்டிகேட்):—"வ. உ. சிதம்பரம் பிள்ளையின் பிறந்த நாளை அரசாங்க விடுமுறை நாளாக அறிவிக்க இந்த அரசு எண்ணியிருக்கிறதா?"

முதலமைச்சர்:—"அந்த மாதிரி எண்ணம் இல்லை."

பொன்னப்ப நாடார் (சிண்டிகேட்):—"மறைந்த வ.உ. சிதம்பரம் பிள்ளை, நாட்டு விடுதலைக்காக அயராது உழைத்தவர்; தியாகத்தின் மூலம் சிறப்படைந்தவர்; ஆகவே அவருடைய பிறந்த நாளை அரசாங்க விடுமுறை நாளாக அறிவிப்பது பற்றி மறுபரிசிலனை செய்யப்படுமா?"

முதல்வர்:—"பொதுவாக, நாட்டுத் தலைவர்கள் அனைவருடைய பிறந்த நாளையும் அரசு விடுமுறை நாட்களாக அறிவிப்பது இல்லை; உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளைத் தவிர மற்றும் நேரு போன்றவர்களுடைய பிறந்த நாளைக்கூட விடுமுறையாக அறிவிப்பது இல்லை.

"ஆனால் நாட்டுத்தலைவர்களின் 100-வது பிறந்த நாள் மட்டும் அரசாங்க விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது; அந்த வகையில், கோபாலகிருஷ்ண கோகலே, சித்தரஞ்சன் தாஸ் ஆகியோரின் 100-வது பிறந்த நாட்கள் அரசு விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

"அடுத்த ஆண்டில் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் 100-வது பிறந்த நாள் வரும் போது அதை தமிழ்நாடு முழுவதும் அரசு விடுமுறை நாளாகக் கொண்டாடுவதோடு மட்டுமன்றி இந்தியா முழுவதும் அன்று அரசு விடுமுறை நாளாகக் கொண்டாட மத்திய அரசை வற்புறுத்த இந்த அரசு ஏற்பாடு செய்யும்."

கே. டி. கே. தங்கமணி (வ கம்யூனிஸ்டு):—"வ உ. சிதம்பரம பிள்ளை அனைத்திந்தியத் தலைவர்களில் ஒருவர்; அவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் அவர் பிறந்த மாவட்டமான நெல்லை மாவட்டத்திற்குமாவது அரசு விடுமுறை நாளாக அறிவிக்கப்படுமா?"

முதல்வர்:—"அவர் அனைத்திந்தியப் புகழ் பெற்றவர் -- என்று உறுப்பினரே கூறியிருக்கிறார்; ஆகவே, அவருடைய அனைத்திந்தியத் தலைமையை மாவட்ட அளவிற்குள் சுருக்க வேண்டும் என்று கருதவில்லை."

கைத்தறித் துணி ஏற்றுமதி

சட்டப் பேரவையில் கேள்விகள் --- அமைச்சர் செ. மாதவன் தகவல்கள்

சென்னை, அக். 22—

கைத்தறித் துணிகளின் ஏற்றுமதி பற்றித் தமிழகச் சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும்--அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

டென்னிஸ் (சிண்டி.):—"கைத்தறித் துணி ஏற்றுமதி அதிகமாகியிருக்கிறதா?"

அமைச்சர் மாதவன்:—"1969-ம் ஆண்டில் ரூ. 26,07,30,000 அளவில் ஏற்றுமதி ஆகியது; ஆனால், 1970-ம் ஆண்டில் ரூ 26,54,66,000 அளவில் கைத்தறித் துணி ஏற்றுமதி இருக்கும் என்றும் தெரிகிறது."

வகாப் (லீச்):—"வண்ணம் மாறும் சென்னைத் துணி ஏற்றுமதி குறைந்துவிட்டதற்கு என்ன காரணம்? தரக் குறைவா? பவானி பெட் ஷீட் போன்றவற்றுக்கு அமெரிக்கா, ஆப்பிரிக்கா நாடுகளில் கிராக்கி இருக்கிறது-- ஏற்றுமதி செய்யப்படுமா?"

அமைச்சர்:—"வண்ணம் மாறும் சென்னைத் துணி ஏற்றுமதி குறைந்தது இந்த ஆண்டில் அல்ல; பல ஆண்டுகளுக்கு முன்பே குறைந்துவிட்டது; ஜப்பான் நாட்டிலிருந்து இயந்திரத்தின் மூலம் நெய்த துணியின் கடும் போட்டியால் நமது ஏற்றுமதி குறைந்தது; எப்போதெல்லாம் கிராக்கி வருகிறது என்று ஆராய்ந்து -- ஏற்றுமதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அனுப்பப்படுகிறது."

பெ. மல்லச்சாமி (தி.மு.க.):—"அமைச்சரவர்கள் உலகச் சுற்றுப்பயணம் போய்வந்தபோது, எந்த நாட்டிலாவது கைத்தறித் துணி ஏற்றுமதி பற்றிப் பேச்சு நடத்தினரா?"

அமைச்சர்:—"ஜப்பான் நாட்டில் அதுபற்றி நமது அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்; தனிப்பட்டவர்கள் சிலர் செய்த ஏற்றுமதியால் அவர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள்; ஆகவே, தமிழ்நாடு மத்திய சங்கத்தின்மூலம் அனுப்பிவைக்கும்படிக் கேட்டிருக்கிறார்கள்; அதை ஆராய்ந்து வருகிறோம்."

அனந்தநாயகி (சிண்டி.):—"'வண்ணம் மாறும் சென்னைக் கைத்தறித் துணி'யை, சிலர் தரம் குறைத்து ஏற்றுமதி செய்வதால அது தடை செய்யப்படுமா? பட்டுக்கு அதிகக் கிராக்கி இருக்கிறது -- ஏற்றுமதி செய்யப்படுமா?"

அமைச்சர்:—"பட்டுத் துணிகள் சுமார் ரூ. 13.50 கோடி வரை ஏற்றுமதி செய்யப்படுகின்றன; தரக்குறைவைத் தடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது."

அனந்தநாயகி:—"'வண்ணம் மாறும் சென்னைத் துணி' என்பதை, 'வண்ணம் மாறும் தமிழ் நாட்டுத் துணி' என்று பெயர் மாற்றப்படுமா?"

இந்தக் கேள்விக்கும் பதில் சொல்லப்படவில்லை."

மதுவிலக்கு தள்ளிவைப்பு மசோதா

சட்டப் பேரவையில் தாக்கல் -- சுதந்தரா எதிர்ப்பு தள்ளுபடி

சென்னை, அக். 22—

தமிழ்நாட்டில் மதுவிலக்கு நிறுத்தி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாகப் புதிய சட்டம் இயற்றக் கோரும் மசோதாவை, நேற்று சட்டப் பேரவையில் முதலமைச்சர் கருணாநிதி தாக்கல் செய்தார்.

மசோதாவை அவர் தாக்கல் செய்ய எழுந்தபோது, சுதந்தராக் கட்சித் தலைவர் டாக்டர் எச். வி. ஹண்டே ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்; 'மதுவிலக்கு ரத்து சம்பந்தமான அவசரச் சட்டத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ள போது, இம்மசோதாவைத் தாக்கல் செய்வது சரியா' என்றார்.

முடிவில் அவருடைய ஆட்சேபனையை அவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தள்ளுபடி செய்தார்.

மதுவிலக்குத் திட்ட நடைமுறையை நிறுத்தி வைத்தும், தமிழ்நாடு ஆப்காரி அவசரச் சட்டத்திற்குப் பதிலான கலால் மசோதாவையும் முதல்வர் தாக்கல் செய்தார்.

அவசரச் சட்டத்தில் காணப்பட்ட விதிகளைத் தவிர அண்டை மாநில ஆப்காரி சட்டத்தில் உள்ள சில பிரிவுகளை உள்ளடக்கித் தமிழகக் கலால் மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நெல்லை மாவட்டத்தில் வறட்சி நிவாரணம்

ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு

திருநெல்வேலி, அக். 22—

திருநெலவேலி மாவட்டத்தில, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் புதிய குடிநீர்க் கிணறுகளைத் தோண்டுவதற்கும், ஏற்கனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், அரசாங்கம் ரூ. 5 இலட்சம் அங்கீகாரம் அளித்துள்ளது.

அரசியல் சட்ட 24-வது திருத்தம் பற்றித் தமிழக மேலவையில் முதலமைச்சர் கருணாநிதி

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"மக்கள் ஒருங்கு சேருவதற்கும், தமது விருப்பம்போல் வழியாடு செய்வதற்கும் இம்மரந்த நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் உள்ள உரிமை நிலைநாட்டப்படும் என்றும், குடிமக்களுக்குள்ள அடிப்படை உரிமைகள் அப்படியே நிலைத்து நிற்கும்" எனவும் தலைமையமைச்சர் உறுதி கூறியுள்ளார்.

சொத்துரிமை மீது சில கோட்பாடுகள் விதிக்கப்படுகின்றன என்றாலும், சொத்துரிமையை நீக்குவதற்காக அவை விதிக்கப்படவில்லை; தனிப்பட்டவர் சொத்துரிமைக்கும் -- பொது மக்களின் பொது நலத்திற்கும் இடையே முரண்பாடு ஏற்படும்போது மட்டும் பொது நலனே மேலோங்கும் என ஏற்பாடுகள் செய்வதற்கே இந்த கோட்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

'மாநிலங்களின் உரிமைகள் இதன்மூலம் பறிக்கப்படுகின்றன' என்ற வாதம் சரியானதல்ல; ஏனெனில், ஏற்கனவே அடிப்படை உரிமைகள் பற்றிய திருத்தங்கள் சட்டமன்றங்களின் ஒப்புதலுக்கு வரவேண்டுமென்று இல்லை; ஆகவே புதிதாக உரிமைகள் பறிக்கப்படுவதாகக் கூறுவது தவறு.

முன்னரே பறிக்கப்பட்டுள்ள மாநில உரிமைகளைப் பெற -- அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட -- அரசியல் சட்டத்தில் மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்ற நமது கருத்தை இந்தத் திருத்தத்துடன் சேர்த்துக் குழப்பத் தேவையில்லை.

'மாநில உரிமைகள் பெருகிட அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்யவேண்டும்' என்று வலியுறுத்துவதையும், அடிப்படை உரிமைகளைப் பற்றிய ஏனைய திருத்தங்களைக்கூட மாநிலங்களின் ஒப்புதலைப் பெற அனுப்ப வேண்டுமென்று வற்புறுத்துவதையும், இந்தத் திருத்தத்தை நிறைவேற்றித் தருவதில் இணைத்திடாமல, அவைகளைத் தனியே எடுத்துச் சொல்ல அதற்கான முறைகளைக் கையாளுவோம் என்று கூறி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1[illegible]) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.